


12.05.2025

தலைப்பு செய்திகள்

- நாட்டின் பாதுகாப்பு நிலைமை குறித்து பிரதமர் திரு. நரேந்திரமோடி மத்திய அமைச்சர்களுடன் இன்று உயர்நிலை ஆலோசனை மேற்கொண்டார்.
- இஸ்ரோவின் 10 செயற்கை கோள்கள், 24 மணி நேரமும் கண்காணிப்பு பணிகளை மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- தேசத்தின் சுகாதார கட்டமைப்பில் செவிலியர்களின் பங்கு இன்றியமையாதது என்று மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா பாராட்டியுள்ளார்.
- மதுரை சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் வெகு விமரிசையாக இன்று நடைபெற்றது.
- சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி அறிவித்துள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடி புதுதில்லியில் மத்திய அமைச்சர்கள் திரு.ராஜ்நாத் சிங், டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித்தோவல், முப்படைகளின் தலைமை தளபதி ஜென்ரல் அனில் சவுஹான் ஆகியோருடன் இன்று உயர்மட்ட ஆலோசனை மேற்கொண்டார்.

பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற இந்த ஆலோசனை கூட்டத்தில் எல்லையோர பகுதிகளில் தற்போதைய பாதுகாப்பு நிலவரத்தின் அனைத்து அம்சங்கள் குறித்து ஆராயப்பட்டது.

இந்நிலையில் இந்தியா பாகிஸ்தான் நாடுகளின் ராணுவ தலைமை இயக்குநர்களும், பேச்சுவார்த்தை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியா சார்பில் லெப்டினன்ட் ஜென்ரல் ராஜீவ்காய் இந்த பேச்சுவார்த்தையில் பங்கேற்றுள்ளார்.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீர் மற்றும் சர்வதேச எல்லையை ஒட்டியுள்ள பிற பகுதிகளில் நேற்றிரவு அமைதி நிலவியதாக இந்திய ராணுவம் தெரிவித்தது.

❖❖❖❖❖❖

விமான நிலையங்கள்

நாட்டில் பாதுகாப்பு காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டிருந்த 32 விமான நிலையங்கள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன.

முன்னதாக இவ்விமான நிலையங்கள் இம்மாதம் 15-ம் தேதிவரை மூடப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது

❖❖❖❖❖❖

நாராயணன்

நாட்டின் பாதுகாப்பிற்காக 10 செயற்கை கோள்கள் 24 மணிநேரமும் கண்காணிப்பு பணியை மேற்கொண்டு வருவதாக இஸ்ரோ தலைவர் திரு. நாராயணன் தெரிவித்துள்ளார்.

மணிப்பூர் தலைநகர் இம்பாலில் மத்திய வேளாண் பல்கலைக்கழகத்தின் 5-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றியஅவர், நாட்டில் 7 ஆயிரம் கிலோ மீட்டர் கடலோர பகுதிகளில் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டியிருப்பதாக கூறினார்.

9 விண்வெளித்துறைகளில் இந்தியா முதலிடத்தில் இருப்பதாகவும், 34 நாடுகளின் 433 செயற்கை கோள்கள் இந்தியாவிலிருந்து ஏவப்பட்டு சுற்றுவட்டப் பாதையில் நிலைநிறுத்தப் பட்டிருப்பதையும் எடுத்துரைத்தார்.

8 வடகிழக்கு மாநிலங்களிலிருந்து 100 அறிவியல் மாணவர்கள் பெங்களூரில் உள்ள இஸ்ரோ மையத்தை பார்வையிடவுள்ளதாகவும், இதன்மூலம் விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த ஆர்வத்தை மாணாக்கர்களிடையே ஏற்படுத்த முடியும் என்றும் கூறினார்.

❖❖❖❖❖❖

பி.ஜே.பி. ஆபரேஷன் சிந்தூர்

தீவரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் ஆபரேஷன் சிந்தூர் மூலம் இந்தியா உலகிற்கு ஒரு தீர்க்கமான செய்தியை வழங்கியுள்ளதாக பி.ஜே.பி.யின் செய்தித்தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக புதுதில்லி கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பேசியஅவர், ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியை உறுதிசெய்த இந்திய ராணுவம், விமானப்படை மற்றும் கடற்படைக்கு நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் நன்றி தெரிவிப்பதாக கூறினார்.

❖❖❖❖❖❖

புத்த பூர்ணிமா

புத்த பூர்ணிமா இன்று கொண்டாடப்படுகிறது

இந்நாளையொட்டி பிரதமர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் உண்மை, சமத்துவம், நல்லிணக்க கொள்கைகளை அடிப்படையாக கொண்ட புத்தரின் போதனைகள் மனிதகுலத்திற்கு வழிகாட்டியாக விளங்குவதாக கூறியுள்ளார்.

தியாகம் மற்றும் தத்துவத்திற்காக அர்ப்பணிக்கப்பட்ட அவரது வாழ்க்கை கருணை மற்றும் அமைதி வழிப்பாதையில் சமூகத்தை ஊக்குவிக்கும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

புத்தரின் ஞானபூமியான கயாவில் பிரம்மாண்ட ஊர்வலம் மற்றும் சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன.

இதில் தாய்லாந்து, வியட்நாம் மியான்மர் உள்ளிட்ட நாடுகளிலிருந்து பக்தர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

சர்வதேச செவிலியர் தினம்

சர்வதேச செவிலியர் தினம் இன்று கொண்டாடப் படுகிறது.

நமது செவிலியர்கள் ! நமது எதிர்காலம் ! செவிலியர் பாதுகாப்பு ! பொருளாதாரத்தில் முன்னேற்றம் ! என்பதே இந்த ஆண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தேசத்தின் வலிமையான சுகாதார அமைப்பிற்கு செவிலியர்களின் பங்கு இன்றியமையாதது என கூறியுள்ளார்.

செவிலியர்களின் இரக்கம் வலிமை மற்றும் அர்ப்பணிப்பிற்கு அவர் பாராட்டுகளை தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், அனைவரையும் ஒன்றுபோல் கருதி அன்புடன் சிகிச்சை வழங்கி ஆதரிக்கும், தூய உள்ளங்களான செவிலியர்களுக்கு நல்வாழ்த்துக்களை உரித்தாக்கி உள்ளார்.

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் நடைபெற்ற சர்வதேச செவிலியர் தினவிழாவில் பி.ஜே.பி. மூத்த தலைவர் டாக்டர். தமிழிசை சவுந்தர்ராஜன் செவிலியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்.

இந்நாளையொட்டி திருச்சி மகாத்மா காந்தி தலைமை அரசு மருத்துவமனையின் செவிலியர் கண்காணிப்பாளர் ஜெயபாரதி தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

தஞ்சை அரசு மருத்துவமனையில் பணியாற்றும் செவிலியர்கள் ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல் அம்மையார் புகைப்படத்திற்கு மலர்த்தூவி மரியாதை செலுத்தியதுடன் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

❖❖❖❖❖❖

கள்ளழகர்

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவில் சித்திரை திருவிழாவின் முக்கிய நிகழ்ச்சியான கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் இன்றுகாலை வெகு விமரிசையாக நடைபெற்றது.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் சூடிகொடுத்த மாலையை ஏற்றுக்கொண்டு பச்சைபட்டுத்தி தங்க குதிரை வாகனத்தில் எழுந்தருளிய கள்ளழகரை வீரராகவ பெருமாள் எதிர்கொண்டு வரவேற்றார்

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று நீலகிரி செல்கிறார்.

இந்த பயணத்தின் போது பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கும் அவர், அங்குள்ள பழங்குடியின மக்களிடம் கலந்துரையாடுகிறார்.

உதகை அரசு தாவரவியல் பூங்காவில் 127-வது மலர் கண்காட்சியை வரும் வியாழக்கிழமை முதலமைச்சர் தொடங்கி வைக்கிறார்.

❖❖❖❖❖❖

நாசர்

ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட நாட்டின் எல்லைப்புற பகுதிகளிலிந்து தமிழகத்தை சேர்ந்த 197 பேர் இதுவரை பத்திரமாக அழைத்துவரப்பட்டுள்ளதாக மாநில சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு.நாசர் தெரிவித்துள்ளார்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் தமிழகம் திரும்பியோரை இன்று வரவேற்று பேசியஅவர், எஞ்சியுள்ளோரை அழைத்து வரும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

கே.என். நேரு

அரசின் நலத்திட்டங்கள் தங்குதடையின்றி பொதுமக்களை விரைந்து சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்

நெல்லை இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மக்களின் நலனை முக்கிய நோக்கமாக கொண்டு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவதாக கூறினார்.

முன்னதாக பாளையங்கோட்டையில் அரசின் சார்பில் 5 ஆயிரத்து 152 பயனாளிகளுக்கு7 கோடிரூபாய் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖

மு.பெ. சாமிநாதன்

பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தை இயற்றிய தொல்காப்பியர் பிறந்தநாளை ஒட்டி சென்னை பல்கலைக்கழகம் அருகே மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு கீழே வைக்கப்பட்டுள்ள

திருவுருவப்படத்திற்கு மாநில செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் உள்ளிட்டோர் இன்று அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்

தொடர்ந்து சித்திரை முழுநிலவு நாளை முன்னிட்டு மெரினா கடற்கரையில் கண்ணகி திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

❖❖❖❖❖❖

விண்ணப்பங்கள்

பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் உதவி பேராசியராக பணிபுரிவதற்கான நெட் தகுதித்தேர்விற்கு விண்ணப்பிக்க இன்று கடைசிநாள் என தேசிய தேர்வுகள் முகமை தெரிவித்துள்ளது.

முதற்கட்ட தேர்வு அடுத்தமாதம் 21-ம் தேதிமுதல் 30-ம் தேதிவரை நடைபெறவுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள சட்டக்கல்லூரிகளில் 5 ஆண்டு சட்டப்படிப்பிற்கான விண்ணப்பதிவு இன்று தொடங்கியது.

❖❖❖❖❖❖

சித்ரா பவுர்ணமி

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவிலில் நடைபெற்ற சித்ரா பவுர்ணமி தினத்தில் 25 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் கிரிவலம் சென்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

நாமக்கல் வாய்ஸ்

நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி 20 சதவிகிதம் வரை குறைந்துள்ளதால் விலை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

பகவதி அம்மன் திருக்கோவில்

பெண்களின் சபரிமலை என போற்றப்படும் கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு பகவதி அம்மன் கோவில் கும்பாபிஷேகம் இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இதில் தமிழகம் கேரளாவை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பற்கேற்றனர்.

❖❖❖❖❖❖

இருவரி

கோடை விடுமுறை முடிந்து பள்ளிகள் விரைவில் திறக்கப்படவுள்ள நிலையில், சிவகங்கை மாவட்டத்தில் பள்ளி குழந்தைகளை ஏற்றிச்செல்லும் பள்ளி வாகனங்கள் விதிகளுக்கு உட்பட்ட பராமரிக்கப்பட வேண்டுமென்று மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ஆஷா அஜித் கூறியுள்ளார்.

நாமக்கல் அரசினர் தொழில்பயிற்சி நிலையத்தில் தொழில்பழகுநர் சேர்க்கை முகாம் நாளை நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் உமா தெரிவித்துள்ளார்.

மன்னார்குடி குட்டக்கரை நலவாழ்வு மையத்தில் 18 வயதிற்கு மேற்பட்ட மகளிருக்கு கர்ப்ப பை மற்றும் மார்பக புற்றுநோய் கண்டறியும் முகாம் இன்று நடைபெறுகிறது.

❖❖❖❖❖❖

விராட் கோலி

சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக இந்திய கிரிக்கெட் வீரர் விராட் கோலி இன்று அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில் சர்வதேச போட்டிகளில் தமது 14 ஆண்டுகால பயணம் முக்கியத்துவம் வாய்ந்தது என குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖

டென்னிஸ்

ரோமில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ரோஹன் போபண்ணா, செக் குடியரசின் ஆடம் இணை - குரேஷியாவின் நிக்கோலா நியூசிலாந்தின் மைக்கேல் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது